கருக்கம்

பொதுப்பணிகள் கருணை அடிப்படையில் பணிநியமனம் – உடல் நலம் இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் அடிப்படையில் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (கூடு.1) துறை</u>

அரசாணை (நிலை) எண் 10 நாள் 13.02.2009

திருவள்ளுவர் ,ஆண்டு 2040

மாசி 1

படிக்கவும்:

1. அரசாணை( நிலை) எண் 1025, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 22.11.1976 .
2. அரசாணை (நிலை) எண் 188 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 19.10. 2000.
3. அரசாணை (நிலை) எண் 42 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 12.03.2007.

<u>ஆணை:</u>

மேலே 1–இல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் மருத்துவ இயலாமை காரணமாக பணி ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் ஆண்/ பெண் ஆகியோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையிலான பணி நியமன சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளது .

2. மேலே 2–இல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில், மருத்துவ இயலாமை காரணமாக பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் அதிகபட்ச வயதுவரம்பு 50 லிருந்து 53 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நிலையில் கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்குத் தடையாணை பிறப்பிக்கப்பட்டு அத்தடையானது அரசாணை (நிலை) எண் 16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள் 21.02.2006 ல் விலக்கி கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 19.07.2006ல் இது குறித்து வழிமுறைகள் தனியாக வெளியிடப்படும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4. உச்சநீதி மன்றத்தீர்ப்பு மற்றும் பணியாளர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அரசாணை (நிலை) எண் 42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 12.03.2007–ல் கருணை அடிப்படையிலான பணிநியமனம் குறித்து சில வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.